**செ. கு. எண்:101** **நாள் :09.10.2015**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் இரங்கல் செய்தி – 9.10.2015

புல்லாங்குழல் இசைக் கருவிக்கு தனித்துவத்தையும், தனிச் சிறப்பையும் ஏற்படுத்திக் கொடுத்த 'புல்லாங்குழல்' திரு. என்.ரமணி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக இன்று **(9.10.2015)** காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

புல்லாங்குழல் இசை மேதையாக விளங்கிய திரு. என்.ரமணி அவர்கள் ஐந்து வயதிலேயே தனது இசை பயணத்தைத் தொடங்கியவர் ஆவார். தனது 22–ஆவது வயதிலேயே மியூசிக் அகாடமியில் புல்லாங்குழல் இசைக் கச்சேரி நடத்தியவர். பக்கவாத்தியமாக இருந்த புல்லாங்குழல் இசையை தனி இசையாக நடத்தியவர் திரு. ரமணி அவர்கள்.

சங்கீத கலாநிதி, சங்கீத கலை சிகாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷண் என்று எண்ணற்ற விருதுகளைப் பெற்றுள்ள திரு. என்.ரமணி அவர்கள் புல்லாங்குழல் இசையில் தனக்கென தனி இடத்தைப் பெற்று பெரும் புகழை தனதாக்கிக் கொண்டவர். புல்லாங்குழல் இசை என்று சொன்னாலே திரு. என்.ரமணி அவர்களை உடன் இணைத்துச் சொல்லும் அளவிற்கு புல்லாங்குழல் இசையில் தன் புகழை நிலைநிறுத்தியவர் திரு. ரமணி ஆவார்.

திரு. ரமணி அவர்களின் மறைவு தமிழ் இசை உலகிற்கு பெரும் இழப்பு ஆகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், கர்நாடக இசை ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**